கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 22.05.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உலக தேனீ தின விழா

வேளாண் பூச்சியியல் துறை, பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் சார்பாக புகழ்பெற்ற தேனீ வளர்ப்பாளர் ஆன்டன் ஜான்சா அவர்களின் நினைவாக **"உலக தேனீ தின விழா"** மே 20, 2025 (செவ்வாய் கிழமை) அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் முக்கிய குறிக்கோளாக, "**தேனீக்கள் – இயற்கை அளித்த ஊட்டச்சத்து உற்பத்தியாளர்கள்**" என்ற தலைப்பின் கீழ் உணவு மற்றும் ஊட்டச்சத்து உற்பத்தியில் தேனீக்களின் அவசியம் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 25 பள்ளிக்குழந்தைகள், 80 வேளாண் இறுதி ஆண்டு மாணவர்கள், மற்றும் பலதரப்பட்ட தேனீ வளர்ப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் அனைத்து வகையான தேனீக்கள் குறித்தும் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக தேனின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களான தேனீ மெழுகு கொண்டு சிலை மற்றும் சோப்பு தயாரிப்பு, தேன் நெல்லி மற்றும் ரோஜா குல்கந்த் தயாரிப்பு பற்றிய செயல்முறை விளக்கம் வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து குழந்தைகளுக்கு கைவினைப் பொருட்கள் செய்தல், மதுரம், மற்றும் மகரந்தம் சேகரித்தல் போன்ற பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. பொதுமக்களுக்கு தேனீக்களின் மேல் உள்ள அச்சம் விலக பேராசிரியர் வா. இரா. சாமிநாதன் அவர்கள் முகம் முழுவதும் தேனீக்களை பரவச் செய்து **'தேனீத் தாடி'** வைத்து காட்டினார்.

இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர், முனைவர். மூ. சாந்தி அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில்

வரவேற்புரை அளித்த பூச்சியியல் துறையின் பேராசிரியர் முனைவர் வா. இரா. சாமிநாதன் அவர்கள், உலக தேனீ தினம் கொண்டாடுவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். தொடர்ந்து பூச்சியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் மா.முருகன் அவர்கள், தேனீ வளர்ப்பில் இளைஞர்களின் முக்கியத்தும் குறித்து விழிப்புணர்வு வழங்கினார். பின்னர் சிறப்புரை ஆற்றிய பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர், முனைவர். மூ. சாந்தி அவர்கள், விவசாயத்தில் தேனீக்களின் பங்கு மற்றும் மகரந்தச் சேர்க்கையின் முக்கியத்துவம் குறித்து குழந்தைகளுக்கு விளக்கம் அளித்தார். ஒவ்வொரு தேனீ வளர்ப்பாளர்களும் அவரவர்களுக்கு தேனீ வளர்ப்பில் ஏற்பட்ட சவால்கள், சாதனைகள் மற்றும் அனுபவங்களை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டனர். பின்னர், இந்த உலக தேனீ நாள் நிகழ்ச்சி, தேனீக்களை பற்றி அறிந்துக் கொள்ள மிகவும் பயனுள்ளதாக இருந்தது என குழந்தைகள் அவர்களின் கருத்துகளையும் தெரிவித்தனர். இறுதியாக ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பலதரப்பட்ட வயதுடைய குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள், தேனீ வளர்ப்பாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் பூச்சியியல் துறையின் மாணவர்கள் பங்குபெற்றனர். நன்றியுரை வழங்கிய முனைவர் மா. இரா. சீனிவாசன், இந்நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பூச்சியியல் துறை சார்பாக நன்றிகளை தெரிவித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**